O.S. No: 55/2022

பெயர் : சண்முகம், த/பெ சோமசுந்தரம்

**வா.சா.1**

07-11-2024

**3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு தாக்கல் செய்தவதற்கு என் வழக்கறிஞரிடம் விவரம் சொன்னது நான் தான் . வா.சா.ஆ.1 படி எனக்கு ஏ செட்டியூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். B செட்டியூல் சொத்து என் தங்கை ருக்மணிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம் . 1, 2 பிரதிவாதிகளுக்கு C சொட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம் . இந்த மொத்த சொத்தும் என் அம்மா பெயரில் வாங்கப்பட்டது என்றால் ஆமாம் . என் அம்மா இறப்பதற்கு முன்பே என் அப்பா இறந்துவிட்டார் என்றால் ஆமாம். என் அம்மா இறந்த பிறகு வாரிசு அடிப்படையில், நான், என் அண்ணன் செல்வகணபதி , என் தங்கை ருக்மணி ஆகியோர் தாவா சொத்தை அனுபவித்து வந்தோம் என்றால் ஆமாம் . வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படும் வரை கூட்டு குடும்ப சொத்தாகதான் இருந்து வந்தது என்றால் ஆமாம். என் அண்ணன் 09/08/2017 இல் இறந்தார். என் அண்ணன் இறந்த பிறகு கூட்டு குடும்ப சொத்தாக இருப்பதை பாகம் பிரித்துக்கொள்வோம் என்று நான் தான் சொன்னேன் என்றால் சரியல்ல . 1 ஆம் பிரதிவாதி பெங்களூரில் வசிக்கிறார் என்றால் ஆமாம் . 2 ஆம் பிரதிவாதி தான் தாவா சொத்தில் முன் பகுதியில் வசிக்கிறார் என்றால் ஆமாம். நான் நர்சூஸ் கம்பெனியில் வேலை பார்த்தேன். நான் B செட்டியூல் சொத்தில் வீடு கட்டும் போது வேலையில் இருந்தேன் . 2002 இல் நான் இந்த வீட்டை கட்டினேன் . நான் என் வழக்குரையில் 25 வருடங்களுக்கு முன்பே நான் என்னுடைய வீட்டை கட்டியிருக்கேன் என்று சொல்லியிருந்தால் அது சரிதான் . முதல் பிரதிவாதி வெளியூரில் இருப்பதால் இந்த பாகப்பத்திரம் செய்யவேண்டும் என்று ஏற்பாடு செய்ததே நான் தான் என்றால் சரியல்ல . 1 ஆம் பிரதிவாதி அவ்வப்போது அவருடைய அம்மாவை வந்து பார்ப்பார் . நான் உள்ளூரில் இருப்பதால் நான் தான் பாகப்பிரிவினை பத்திரத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தேன் என்றால் சரியல்ல. ராமலிங்கம் யார் என்றே தெரியாது. நான் வழக்கிற்காக ராமலிங்கம் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல . பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தும் போது எனக்கு வீட்டுடன் சேர்த்து ஒரே தாக்காக இடம் வேண்டும் என்று சொன்னதால் தான் வீடு 30 அடி அதற்கு

பின்னால் 50 அடி காலியிடமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தங்கை ருக்மணியை கூப்பிட்டு கையெழுத்து போட சொன்னதும் நான் தான் என்று சொன்னால் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்துவதற்கு முன்பு தேவா என்ற இஞ்சினியர் வந்து பார்த்தாரா என்றால் இல்லை. தேவா என்ற இஞ்சினியர் வந்து பார்த்து மாடி படியை இடிப்பதால் எந்த சேதமும் கட்டிடத்திற்கு ஏற்பாடாது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. B செட்டீயூல் சொத்திற்கு பொது பாதை வழியாக தான் போகவேண்டும் என்றால் ஆமாம். B செட்டீயூல் சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் 40 சதுரடி. வீட்டுக்கு போவதற்கே 40 வருடமாக அந்த பொது பாதை தான் வழி என்றால் ஆமாம். என் வீட்டில் இருந்து பின் பக்கம் போவதற்கு கிரில் கேட் உள்ளது. அந்த கேட்டை நான் பூட்டி தான் வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. எல்லா கேட்டையும் நான் திறந்தே வைத்திருப்பேன் . 3 ஆம் பிரதிவாதியோ, அவரது உறவிணர்களோ B செட்டியூல் சொத்தை பார்க்க வேண்டும் என்று சொன்னால் நான் தான் கேட்டை திறந்து விடுவதில்லை என்றால் சரியல்ல . நான் 1999- 2000 இல் ஓய்வு பெற்றேன். 1999- 2000 இல் என் வயது 46 என்றால் அப்பொழுது என் வயது 58. நான் வேலையில் இருந்து ரிட்டேடு ஆகவில்லை என்னை ஊஸ்ட்டு செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல . பாகப்பிரிவினை பத்திரத்தில் எனக்கு சாதகமாக தான் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் நான் யாருடைய துர்போதனையின் காரணமாகவோ இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் கேட்ட எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.